RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ஏனாதி சென்றாய பெருமாள் கோயில் வழிபாடு

ஆ. மணிகண்டன் [அ *]

[அ] தமிழ்த்துறை, கேஜி கலை மற்றும்அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641 035,

# A Study of the Worship Traditions of the Enathi Chendraya Perumal Temple

A. Manikandan [a, *]

[a] Department of Tamil, KG College of Arts and Science, Coimbatore, Tamil Nadu

*Corresponding Author:
sankarmanimk@gmail.com

**ABSTRACT**

Vaishnavite religious scholars and devotees have, over the centuries, established numerous temples and prescribed structured modes of worship and ethical practices to guide human life according to religious principles. Among these sacred sites, the Chendraya Perumal Temple, located in the village of Enathi near Semmandapatti in Salem District, occupies a significant place in the religious and cultural life of the local community.The worship traditions observed at this temple reflect the cultural heritage, religious beliefs, and customary practices of the people of the region. The temple serves not only as a center of devotion but also as a repository of the community's social and cultural identity. This study examines the distinctive worship practices, rituals, architectural features, and organizational structure of the Enathi Chendraya Perumal Temple, highlighting their cultural and religious significance within the Vaishnavite tradition.

**Keywords:** Cultural Traditions, Tamil society, Worship practices, Vaishnavite tradition, Enathi Chendraya Perumal Temple

## முன்னுரை

மக்களிடையே வாழ்க்கை நெறிமுறைகளை ஒழுங்குபடுத்தவும், இறைப்பற்றை வளர்ப்பதற்காகவும் முன்னோர்கள் பலவகையான கோயில்களைக் கட்டி அவற்றிற்கென சில நியமங்களையும் வகுத்தனர். இவற்றுள் பெருமாள் வழிபாடானது மிகப்பழமை வாய்ந்தது ஆகும். இப்பெருமாள் வழிபாட்டில் ஏனாதி என்னும் ஊரில் வசிக்கும் மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகள், வழிபாட்டு கூறுகள் பற்றியும் சென்றாய பெருமாள் கோயிலில் நிகழ்த்தப்படும் வழிபாடுகள் ஆகியவற்றை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## பெருமாள் வழிபாட்டின் தொன்மை

திருமாலை முழுமுதற் கடவுளாக கொண்ட சமயம் வைணவம் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. விஷ்ணுபுராணம், கருடபுராணம், பாகவதபுராணம் போன்ற பலவகை புராணங்களிலும், இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களை அடுத்து பெருமாள் பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் அதிக அளவில் காணக்கிடைக்கின்றன. தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் திருமாலை முல்லை நில வேந்தன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை அடுத்து சங்க இலக்கியங்களில் மதுரைக்காஞ்சி, பெரும்பாணாற்றுப்படை, பரிபாடல், முல்லைக்கலி ஆகியவற்றிலும் பெருமாள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

நற்றிணை,

“மாயோன் அன்ன மால்வரைக் கவா அன்
வாலியோன் அன்ன வயங்குவள் அருவி”[1]

என்று திருமாலைப் பற்றி குறிப்பிடுகிறது.

திருமாலே (பெருமாள்) ஒரு மனிதனின் பிறவியை அறுத்து, அவனை மீண்டும் பிறவி எடுக்கச் செய்த வீடுபேற்றை அளிப்பவர் என்பதை,

"மாஅ யோயே! மாஅ யோயே

மறபிறப் பறுக்கும் மாசில் சேவடி

மணிதிகழ் உருவின் மாஅ யோயே!"[2]

என கடுவின் இளவெயினனார் கூறுகிறார்.

## ஏனாதி சென்றாய பெருமாள் திருக்கோயில்

சென்றாய பெருமாள் கோயில் செம்மாண்டபட்டி கிராமம் ஏனாதி என்னும் சிற்றூரில் அமைந்துள்ளது. சுமார் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஏனாதி என்ற சிற்றூர் மிகவும் சிறப்பு மிக்க ஊராக விளங்கியது.

"நீரினாலும் காற்றினாலும் நிகழ்வுறு வெடிப்பினாலும்

வாரிலின் கொதிப்பினாலும் வளமுறு காட்டினாலும்

பாரினால் கள்வராலும் பகைவரால் கொள்ளையாலும்

ஆரினும் குற்றம் சேரா அமைந்திட்ட நல்ல நாடே"[3]

என்ற பாடல்வரிகள் ஏனாதி நகருக்கு சிறப்புச் சேர்க்கின்றன.

இவ்வூரில் உள்ள மக்கள் நெசவுத் தொழிலிலும், விவசாயத்திலும் சிறந்து விளங்குகின்றனர்.

ஏனாதி நகரில் தெற்கில் சிவன் ஆலயமும், மேற்குப் பகுதியில் மாரியைப் பொழிகின்ற மாரியம்மன் ஆலயமும் அமைந்திருக்க, கிழக்குப் பகுதியில் காளியம்மன் ஆலயமும் அமைந்திருக்க இவற்றிற்கு வடக்கில் சென்றாய பெருமாள் ஆலயம் அமைந்துள்ளது. இதனை,

"ஆல்வலர் மாயன் ஆதிகேசவன் வடக்கே நிற்க

தொல்லுலகளிக்கும் ஈசன் துணை என்று தெற்கே நிற்க

பல்லவர் வணங்கும் மாரி பதியது மேற்கே நிற்க

எல்லையாய்க் கொண்ட பத்ரகாளியும் கிழக்கே நின்றாள்." [4]

என்ற பாடல் வழி அறியமுடிகிறது.

ஏனாதி என்னும் ஊரில் உணவுப் பண்டங்கள் தேவைக்கு அதிகமாகவே இருந்தது. அதைப் போலவே இவ்வூரை சுற்றிலும் எங்கு பார்த்தாலும் அதிக அளவில் நெற்களஞ்சியங்கள் காணப்பட்டன. இந்நெற்களஞ்சியங்களில் கொண்டப்ப செட்டியார் என்பவரின் நெற்களஞ்சியமும் ஒன்றாகும். இவரின் நெற்களஞ்சியத்தில் நெற்குவியல்கள் பல நாட்களாக கவனிக்கப்படாத நிலையில் இருந்ததன் காரணமாக அந்த நெற்குவியலின் மேலே புற்றுக்கண் தோன்ற ஆரம்பித்து விட்டது. அச்சமயத்தில் ஒரு நாள் கொண்டப்ப செட்டியார் தனது நெற்களஞ்சியத்தை பார்வையிட வரும்போது அங்கு நெற்குவியலில் புற்றுக்கண் தோன்றியதைக் கண்டு உடனடியாக அப்புற்றுக்கண்ணை அகற்றுமாறு தனது அடியாட்களுக்கு உத்தரவிட்டார். பணியாட்கள் அப்புற்றை அகற்றுவதற்காகச் சென்ற பொழுது புற்றின் உள்ளிருந்து பெரிய நாகம் ஒன்று தோன்றி வேலையாட்களை புற்றை அகற்ற விடாமல் துரத்தியது. இச்செய்தி கொண்டப்ப செட்டியாருக்கு அறிவிக்கப்பட்டது.

அன்று இரவு கொண்டப்ப செட்டியார் தூங்கிக் கொண்டிருந்த பொழுது அவருக்கு அருகில் நாகம் தோன்றி "நான் பாற்கடலில் திருமாலுக்குக் குடையாக விளங்கும் ஆதிசேசனின் வழிவந்தவன். சீரும் சிறப்பும் கொண்டு விளங்கும் இந்த ஏனாதி நகரத்தில் எழுந்தருளி இருக்கின்றேன்."[5]

மேலும் "நான் குடிகொண்டிருக்கும் செந்நெல் புற்றினை அழிக்க வேண்டாம். நீங்கள் எல்லோரும் வணங்கும் திருமாலின் உறைவிடமாகக் கொண்டதாக இந்த செந்நெல் புற்று விளங்குவதால் பூசை வழிபாடுகள் செய்து வழிபட வேண்டும்"[6] என்று கூறியது.

கொண்டப்பசெட்டியாரும் செந்நெல் புற்றானது தாம் வணங்கும் மகாவிஷ்ணுவின் இருப்பிடம் என்று அறிந்து மகிழ்ச்சியடைந்து புற்றுக்கு செந்நெல்ராயன் என அழைத்தார். இதில் 'ராயன்' என்பது ஈற்றில் வணங்குதற்குரிய சொல்லாகும். நாளடைவில் இச்செந்நெல்ராயன் என்னும் பெயர்

சென்னராயன் என்ற வழங்கி வந்து தற்போது விஷ்ணுவின் பெயராகிய பெருமாள் என்பதை ஈற்றில் சேர்க்கப்பட்டு ஸ்ரீசென்றாய பெருமாள் என அழைக்கப்பட்டு வருகிறது.

கொண்டப்பசெட்டியார் மகாவிஷ்ணுவின் உறைவிடமாக விளங்கும் செந்நெல் புற்றினை கருவறையாக வைத்து அங்கே ஒரு கோயிலைக் கட்டி முடித்தார். பிறகு சில நாட்கள் கழித்து கொண்டப்பசெட்டியாருக்கு ஒரு சிலையும் அமைக்கப்பட்டது. மேலும் கோயிலினுள் வலம் வரும் பொழுது ஒரு பாறை உள்ளது. அப்பாறையில் அக்காலத்து எழுத்தில் ஒரு கல்வெட்டு உள்ளது. அதில்,

“கொண்டப்பன் திருப்பணி என்றும்

சென்றாய பெருமாள் கோயிலுக்கு

வடக்கு குடி அமைத்தோன்”[7]

என்றும் குறிப்பு காணப்படுகிறது.

இவ்வாறாக செந்நெல் களஞ்சியத்தில் தோற்றுவிக்கப்பட்ட சென்றாய பெருமாள் நான்கு சதுர வடிவில் தோன்றி வளர்ந்து பிறகு சுமார் முந்நூறு ஆண்டுகள் இந்நெற்களஞ்சியத்தையே மக்கள் கோயிலாக அமைத்து வழிபட்டு வந்தனர். இவ்வாறு வணங்கி வந்தவர்களில் ஏனாதி என்னும் ஊரில் வாழ்ந்து வந்த தேவாங்க செட்டியார்கள் முதன்மை பெற்றவர்களாக இருந்தனர். அவர்களின் முயற்சியாலும் கொண்டி செட்டியாரின் மனப்பான்மையினாலும் 13 - 14 ம் நூற்றாண்டில் சென்றாய பெருமாளின் உறைவிடமான செந்நெல் களஞ்சியத்தை மையமாக வைத்து வழிபாடுகள் செய்து வழிபட்டு வந்தனர் என்பது முன்னோர்களின் வழிவழியாக வரும் மரபுவழி செய்தியாகும்.

ஏனாதியில் அமைந்துள்ள சென்றாய பெருமாளை,

“இந்நகர்தனில் வடக்கு எழுந்தருள் பிரான் சென்றாய

முன்னகர்க் கொண்ட தேவன் மூவருள் பெருமாளென்று

அந்தமாய் ஆதியாகி அருள்புரி பெருமாளாகி

பந்தமாய் பாருக்கெல்லாம் அருள் பாலித்து அருளி நின்றான்”[8]

எனவும்,

“ஆதலால் அவன்பேர் சொல்லி ஆதியில் வடிவு கொண்ட

பாதமேகதி யென்றெண்ணி பாடலால் துதிக்க நேர்ந்தான்

காதளால் காவியத்தைக் கவிகளால் பாடவந்தான்

வேதநாயகன் தான் போற்றும் வெங்கடாசலம் என்பானே”[9]

என்ற பாடல் வரிகள் பெருமை சேர்ப்பனவாய் அமைகின்றன.

## சென்றாய பெருமாள் கோயில் கருவறை அமைப்பு

சென்றாய பெருமாள் கோயில் இரண்டு மூலஸ்தனங்களைக் கொண்டு விளங்குகிறது. இதில் ஒரு மூலஸ்தனத்தில் புற்றுக்கண் மூலவராகவும் மற்றொரு மூலஸ்தனத்தில் பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவியுடன் காட்சித்தரும் நிலையிலும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இங்கு விநாயகர், நரசிம்மர் போன்ற சிலைகளும் அமைந்துள்ளது. கருவறைக்கு வெளியே வலது புறம் இராமானுஜருக்கும், இடது புறம் நாகதேவதைகளுக்கும் சிலை உள்ளது. கோயிலுக்கு வெளியே கல்தூணால் செய்யப்பட்ட இரண்டு கொடிமரங்கள் அமைந்துள்ளது. இதில் முதல் கொடிமரத்தில் ஆஞ்சநேயர் உருவமும், இரண்டாவது கொடிமரத்தில் கருடாழ்வார் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றில் இரண்டாவதாக அமைந்துள்ள கொடிமரம் திருக்கோடி மரம் என்றும் அழைக்கப்படுகிறது. இக்கோயில் 800 வருடங்கள் பழமையானது மற்றும் 800 வருடங்கள் பழமையான புற்றுக்கண் சிதையாமல் இருப்பதும் கோயிலின் சிறப்பு ஆகும்.

## திருக்கோடிவழிபாடு

திருக்கோடி என்பது துணியில் திரியை பந்தம் போல் தயார் செய்து பூசை செய்தலைக் குறிக்கும். அப்போது வேண்டுதல் வைத்தவரின் குடும்பத்தில் இருந்து, யார் வேண்டுதலை நிறைவேற்றுகிறார்களோ அவர் கழுத்தில் பூமாலை அனுவிக்கப்பட்டு அவர் கையில் ஒரு திருக்கோடி

சட்டியில் எண்ணெய் ஊற்றி கொடுப்பர். கோயில் பூசாரி திருக்கோடி திரியை பற்ற வைத்து, பூசாரியும் வேண்டுதல் செலுத்துபவரின் குடும்பமும் கோயிலைச் சுற்றி ஒருமுறை வலம் வருவர். அப்போது

"நீலமோகனா நித்ய நாராயண ஹரி கோவிந்தா கோவிந்தா

பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமா ஹரி கோவிந்தா கோவிந்தா"[10]

என்ற பெருமாள் கோயில் பூசாரி பாடிக்கொண்டே கோயிலைச் சுற்றி வலம் வந்த பின்னர் கோயிலுக்கு வெளியே உள்ள திருக்கோடி கம்பத்திற்கு செல்வர். அதன் பிறகு கோயில் பூசாரி திருக்கோடி சட்டியில் திரியை வைத்து திருக்கோடி கம்பத்தில் ஏறி திருக்கோடி சட்டியை வைப்பார். அவ்வாறு வைத்த பிறகு வேண்டுதல் வைத்த குடும்ப நபர்கள் அனைவரும் திருக்கோடி கம்பத்தை நோக்கி நெடுஞ்சான் கிடையாக விழுவர். அச்சமயம்

"ஹரிஹரி பூமிஹரி ஹரி காவேரி

ஹரி ஸ்ரீரங்கம் பச்ச பச்ச கமல கமல

எமனை பலகாரம் செய்த ராமா"[11]

என்ற பாடல் பாடிய பிறகு வேண்டுதல் வைத்தவரின் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரின் பெயராக அழைப்பர். உதாரணமாக சின்னப்பையன் என்ற பெயரைக் கூறி சின்னப்பையன் செய்த தான தர்மங்களும் பல உபகாரமாகி இவ்வாறாக குடும்பத்தில் உள்ள அனைவரின் பெயருக்குப் பின்னரும் மேற்சொன்ன வசனத்தை பூசாரி கூறுவார். அதன் பின்னர்,

"சகல குடும்பங்களும் செய்யப்பட்ட தானதர்மங்களும் உபகாரமாகி

சொல்லு முக்கோடி தேவர்களுக்கும் திருக்கல்யாணம் ஆகி

சிவநாராயணா கோவிந்தா கோவிந்தா"[12]

என்று கூறியவாறு பூசாரி வேண்டுதல் வைத்த குடும்ப நபர்களின் மீது தீர்த்தத்தை தெளித்து கற்பூரம் ஏற்றி பூசை செய்து திருக்கோடி வழிபாட்டை நிறைவு செய்வர்.

## மார்கழி மாதம்

மார்கழி மாதம் தட்சிணாயனத்தின் கடைசி காலகட்டம் ஆகும். வேதங்களில் புவியில் ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். இதில் தை முதல் ஆடி வரை பகல் பொழுதாகவும், ஆடி முதல் மார்கழி வரை இரவுப் பொழுதாகவும் கணக்கிடப்படுகிறது. இவற்றுள் மார்கழி மாதமானது தேவர்களுக்கு அதிகாலை பொழுதாகும். அதிகாலையில் (பிரம்ம முகூர்த்தத்தில்) செய்யப்படும் வழிபாட்டிற்கு வலிமை அதிகம் ஆகும். அதைபோலவே தேவர்களுக்கு அதிகாலைப் பொழுதான மார்கழி மாதத்தில் செய்யப்படும் வழிபாட்டிற்கும் வலிமை அதிகம் ஆகும். அதிலும் குறிப்பாக மார்கழி மாதத்தில் பெருமாள் கோயிலில் செய்யப்படும் வழிபாடு சிறப்பு வாய்ந்தது ஆகும்.

## ஏகாதசி வழிபாடு

விரதங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தது 'ஏகாதசி' விரதம் ஆகும். ஏகாதசி என்றால் கிருஷ்ணரின் திருநாள் என்று வேதசாஸ்திரங்கள் குறிப்பிடுகிறது. ஏகாதசி என்றால் பதினொன்று என்று அர்த்தம். ஒவ்வொரு மாதமும் இரண்டு விதமான ஏகாதசிகள் வரும். இதில் ஒன்று அமாவாசையில் இருந்து பதினொன்றாம் நாளையும், பௌர்ணமியில் இருந்து பதினொன்றாம் நாளையும் குறிக்கும்.

## ஏகாதசி தோன்றிய காரணம்

முராசுரன் என்று அழைக்கப்படக் கூடிய அசுரன், தேவர்களை துன்புறச் செய்து, அவர்களை சொர்க்கத்திலிருந்து விரட்டியடித்தான். இந்திரன் முதலான அனைத்து தேவர்களும் திருமாலிடம் (பெருமாள்) சென்று தங்களின் குறைகளைக் கூறினர். முராசுரன் என்னும் அசுரனின் கொடுமைகளைக் கேட்ட திருமால் தேவர்களுக்கு உதவி செய்வதாகக் கூறினார். திருமால் முராசுரனுடன் போரிட்டார். இவர்களுக்கு இடையே நடைபெற்ற நீண்ட கால யுத்தத்தில் திருமால் (விஷ்ணு) பத்திரகாஷ்கமரத்தில் உள்ள ஹேமவதி என்று அழைக்கப்படக்கூடிய ஒரு குகைக்குள் ஓய்வெடுப்பதற்காகச் சென்றார். திருமாலை தேடிவந்த அசுரன் உறக்கத்திலிருந்த திருமாலிடம் போரிட விரும்பிய போது திருமாலின் உடலிலிருந்து ஓர் அழகான மகள் தோன்றினாள். அசுரனுடன் தொடர்ந்து போரிட்ட அப்பெண் அவ்வரக்கனின் தலையை வெட்டி வீழ்த்தினாள். திருமால் துயிலெழுந்த போது முராசுரன் மரணம்

அடைந்திருப்பதையும் தன் முன் கூப்பிய கரங்களுடன் இருக்கும் தேவியையும் கண்டு நீ யார் என்று கேட்டார். தங்களின் உடலிலிருந்து தோன்றியவள் நான். உறக்கத்திலிருந்து தங்களை இந்த அசுரன் கொலை செய்ய முயன்றதால் நான் அவ்வரக்கனைக் கொன்று விட்டேன் என்று கூறிய அப்பெண்ணின் வார்த்தைகளைக் கேட்டு மகிழ்வுற்ற திருமால் என்னுடைய ஆன்மீக சக்தியான நீ 11-ம் திதியில் தோன்றியதால் ஏகாதசி என்று அழைக்கப்படுவாய். மேலும் நீ தோன்றிய நாளான ஏகாதசியில் விரதம் இருப்பவர்கள் எல்லாவிதமான பாவ விளைவுகளிலிருந்தும் விடுபட்டு பக்தி நிலையை அடைவார்கள் என்று வரம் அளித்தார்.

## வைகுண்ட ஏகாதசி

மார்கழி மாதத்தில் வரும் வளர்பிறை பதினொன்றாம் நாள் வைகுண்ட ஏகாதசி என்று அழைக்கப்படுகிறது. இந்த நாளின் முன்னிரவில் பக்தர்கள் உறங்காது இருந்து திருமாலின் புகழைப் பாடிக்கொண்டு கோயிலுக்குச் செல்வர். ஒவ்வொரு ஏகாதசி அன்றும் உண்ணா நோன்பிருந்து பெருமாளை வழிபடுவதால் தங்களின் பாவ விளைவுகள் மன்னிக்கப்பட்டு கஷ்டங்கள் நீங்கும் என்று மக்கள் நம்புகின்றனர். அனைத்து ஏகாதசி நாட்களிலும் உண்ணா நோன்பு இருந்து பெறும் பயனை வைகுண்ட ஏகாதசி அன்று ஒருநாள் இருக்கும் விரதத்தால் பெறலாம் என விஷ்ணு புராணம் போன்ற புராணங்களின் மூலம் அறியலாம்.

ஏனாதி சென்றாய பெருமாள் திருக்கோயிலில் வைகுண்ட ஏகாதசி அன்று விரதங்கள் கடைபிடிக்கப்பட்டு திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. ஏகாதசியை அடுத்த நாளான துவாதசி அன்று ஏனாதி சென்றாய பெருமாள் கோயிலில் மெரமணை (சுவாமி ஊர்வலம்) நடத்தப்படும். இந்த மெரமணையானது செம்மாண்டபட்டியில் அமைந்துள்ள வீரஅக்கம்மாள் கோயில் வரை சென்று வரும்.

ஏகாதசி விரதம் இருப்பவர்கள் ஏகாதசிக்கு முதல் நாளான தசமி அன்று சூரியன் அஸ்தமனத்திற்குள் உணவினை உட்கொண்டு விட்டு விரதங்களை ஆரம்பிப்பர். அதைப்போன்று ஏகாதசிக்கு மறுநாளான துவாதசி அன்று பெருமாளுக்குப் படைக்கப்பட்ட (நைவேத்யம் செய்யப்பட்ட) உணவினை உட்கொண்டு விரதத்தை நிறைவு செய்வர்.

## பொங்கல் விழா

தமிழர் திருநாளாம் தை 1ம் நாள் அன்று ஏனாதி சென்றாய பெருமாள் கோயிலில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். மற்ற கோயில்களைக் காட்டிலும் பெருமாள் கோயிலில் பொங்கல் அன்று சிறப்பு வழிபாடு நடைபெறும். ஏனெனில் பொங்கல் பண்டிகை பெருமாளோடு தொடர்புடையது என்று புராண, இதிகாசங்கள் குறிப்பிடுகின்றன.

ஆயர்பாடியில் வசித்து வந்த மக்கள் 'கோவர்த்தனகிரி' என்று அழைக்கப்படும் மலைக்கு பூசை செய்து வழிபடுகின்றனர். இம்மலைக்குப் பூசை செய்து வழிபடுவது தேவர்களின் தலைவனான தேவேந்திரனுக்குப் பிடிக்காத காரணத்தினால் தொடர்ச்சியாக ஒரு வாரம் ஆயர்பாடி மக்கள் மீது மழை பொழிகின்றார் இந்திரன். அச்சமயம் கிருஷ்ணர் தன்னுடைய சுண்டு விரலால் கோவர்த்தன மலையை தாங்கிக் கொள்கிறார். அவ்வாறு தாங்கி கொண்டிருக்கப்படுகின்ற கோவர்த்தன மலைக்கு அடியில் ஆயர்பாடியில் உள்ள மக்கள் அனைவரும் தஞ்சம் அடைந்தனர். இவ்வாறாக ஒரு வாரம் தொடர் மழைப் பொழிவை தொடர்ந்து மார்கழி மாதத்தின் இறுதியில் தன் தவறை உணர்ந்து மழையை நிறுத்துகிறார் இந்திரன். மழை நின்ற பிறகு ஆயர்பாடியில் உள்ள மக்கள் தங்களின் வீடுகளுக்குச் சென்று மழையால் நனைந்த பொருட்களை வெளியே எடுத்து வீட்டை சுத்தம் செய்து மாவிளையில் தோரணங்கட்டி, வெள்ளையடித்து வீட்டை அலங்காரம் செய்து போகி கொண்டாடி, அடுத்த நாள் பசுக்களை ஏர் பூட்டி விவசாயம் செய்கின்றனர் என்று பாகவதபுராணம் குறிப்பிடுகிறது. இதன் எச்சமாகவே மக்கன் இன்றும் பெருமாள் கோயில்களில் போகிப்பண்டிகையையும், தைத்திருநாளையும் கொண்டாடுகின்றனர். இதனை,

"வசோ நிஸம்ய நந்தஸ்ய ததான்யெஷாம் வ்ரௌகஸாம்

இந்தாய மன்யும் ஜனயன் பிதரம் ப்ராஹ கேஸல"[12]

என்று பாகவத புராணம் குறிப்பிடுகிறது.

## முடிவுரை

சேலம் மாவட்டம் ஏனாதி என்னும் ஊரில் அமைந்துள்ள சென்றாய பெருமாள் கோயில் வழிபாடு சிறப்பு வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. இவ்வழிபாடுகளில் சிறப்பு வாய்ந்த வழிபாடான திருக்கோடி வழிபாடு மற்றும் வைகுண்ட ஏகாதசி வழிபாடு ஆகியவற்றின் சிறப்புகள் பற்றி

அறியமுடிகிறது. மேலும் புராணங்களில் காணப்படும் பொங்கல் வழிபாட்டின் நம்பிக்கை இவ்வூர் மக்களின் நம்பிக்கையோடு பின்னிப்பிணைந்துள்ள விதத்தை அறிவதோடு மட்டுமல்லாமல் சேலம் மாவட்டம் நெசவுத் தொழிலுக்கு சிறப்பு வாய்ந்த ஊர் ஆதலால் இவ்வூர் மக்கள் நெசவுத் தொழிலிலும் சிற்நது விளங்குகின்றன என்பதை இக்கட்டுரை மூலம் உய்த்துணரமுடிகிறது.

## References

சாமிநாதையர், உ.வே (1978) நற்றிணை மூலமும் உரையும், உ.வே.சா நூல் நிலையம், சென்னை.

பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர். அ.ச (2015) ஸ்ரீமத் பாகவதம், பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, மும்பை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License